**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2021**

**வழக்கு சாட்சி: PW.7**

**தேதி: 18.09.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **கொண்டையப்பன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் 28.02.2019ம் தேதி காஞ்சிரங்கால் குரூப் கிராம உதவியாளராக பணியாற்றினேன். அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் நானும் கிராம நிர்வாக அலுவலர் கௌரி சங்கரும் காஞ்சிரங்கால் விஏஓ அலுவலகத்தில் பணியாற்றிய போது தொண்டி ரோட்டில் சமத்துவபுரம் எதிர்புறம் சாம்பவிகா ஸ்கூல் அருகே முந்திரிக் காட்டில் ஒருவர் இறந்துக் கிடப்பதாக விஏஓவிற்கு தகவல் வந்தது. யார் தகவல் சொன்னது என்று எனக்கு தெரியாது. நானும் கிராம நிர்வாக அலுவலரும் உடனே கிளம்பி மேற்படி முந்திரிக் காட்டிற்கு சென்று பார்த்த போது அடையாளம் தெரியாத சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் கழுத்திற்கு மேலே ரத்தத்துடன் இறந்துக் கிடந்தார். உடனே நாங்கள் சிவகங்கை நகர் காவல் நிலையம் வந்து மாலை சுமார் 06.00 மணியளவில் புகார் கொடுக்கப் போனோம். விஏஓ எழுத்துமூலமாக புகாரைக் கொடுத்தார். அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்தார்கள். அன்று மாலை சுமார் 06.30 மணிக்கு மீண்டும் விஏஓ மற்றும் போலீசுடன் சம்பவயிடத்திற்கு சென்றோம். அங்கு இருந்தவர்கள் யாரும் பிரேதத்தை அடையாளம் காட்டவில்லை. பின்னர் இறந்து போனவரை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சு மூலம் அனுப்பி வைத்தார்கள். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். இறந்து போனவர் யார் என்று எனக்கு தெரியாது என்று கூறினேன்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பில் அதை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது:**

நான் முதன்முதலாக சம்பவயிடம் சென்ற போது அங்கு ஆட்கள்

கூட்டமாக இருந்தார்கள். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வரை இறந்தவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் விஏஓவுடன் காவல் நிலையத்திற்கு போனேனா என்றால் போனேன். இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்று கேட்டால் விசாரித்து ஸ்டேட்மெண்ட் பதிவு செய்தார். விஏஓ தகவல் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு முன்பே மேற்படி சம்பவம் பற்றி போலீசாருக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2021**

**வழக்கு சாட்சி: PW.8**

**தேதி: 18.09.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **ராஜா** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**முதல் விசாரணை:**

என் தகப்பனார் பெயர் ஜெயச்சந்திரன். நான் சிவகங்கை அண்ணாநகரில் வசிக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் அ.சா.ஆ.1ல் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். சிவகங்கை சாம்பவிகா பள்ளி அருகே முந்திரிக் காட்டில் வைத்து 2019ம் வருடம் 2ம் மாதம் 28ம் தேதி இரவு 07.30 மணிக்கு மேற்படி பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் சம்பவயிடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். மேற்படி பார்வை மகஜரில் பரித் முகமது என்பவரும் சாட்சி கையெழுத்துப் போட்டார். சம்பவயிடத்தில் அதன் பின் 07.50 மணியளவில் ரத்தம் படிந்த மண், சாதாரண மண், ரத்தம் படிந்த உடைந்த பீர் பாட்டில் கைப்பற்றப்பட்டது. அது சம்பந்தமாக போலீசார் அத்தாட்சி தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சி கையெழுத்திட்டுள்ளேன். அந்த அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் பரித் முகமது இரண்டாவதாக சாட்சி கையெழுத்துப் போட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். போலீசார் சம்பவயிடத்தில் கைப்பற்றிய ரத்தம் பட்ட ரத்தம் படாத மண் மற்றும் உடைந்த ரத்தம் படிந்த பீர் பாட்டில் துகள்கள் என்னிடம் காண்பிக்கப்படுபவை தான். அவை ஏற்கனவே அ.சா.பொ.4 முதல் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பில் அதை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது:**

சிவகங்கை - தொண்டி மெயின் ரோட்டிற்கும் பிரேதம் கிடந்ததாக

சொல்லும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டால் சுமார் அரை கிலோ மீட்டர் இருக்கும். அத்தாட்சியை யார் தயாரித்தார்கள் என்று கேட்டால் பெயர் தெரியாது. ஆனால் போலீஸ் தான் தயார் செய்தார்கள். கைப்பற்றுகை மகஜர் கணினியில் தயாரிக்கப்பட்டுள்ளது. எங்கு போய் பிரிண்ட் எடுத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. காரில் வைத்து லேப்டாப்பில் போலீசார் தயாரித்ததாக சாட்சி கூறுகிறார். போலீசார் விசாரணையில் காரில் லேப்டாப்பில் வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டதாக குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை . நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் என் முன்னிலையில் போலீசார் சம்ப வயிடத்தை பார்வையிடவில்லை என்றும் நான் சொன்னது போல் சம்பவயிடத்திலிருந்து ரத்தம் பட்ட மண்ணோ, ரத்தம் படாத மண்ணோ பீர் பாட்டில் துகள்களோ கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அத்தாட்சி, பார்வை மகஜர் காவல் நிலயத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. நான் ஆட்டோ டிரைவராக பணியாற்றுவதால் போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2021**

**வழக்கு சாட்சி: PW.9**

**தேதி: 18.09.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **சுரேஸ்** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை டவுனில் குடியிருக்கிறேன். 08.03.2019ம ்தேதி வாணியங்குடி கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றினேன். கார்த்திகைராஜா என்பவர் கிராம உதவியாளராக பணியாற்றினார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் Village Administrative Officer என்பதற்கு மேலே உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.03.2019ம் தேதி காலை 07.00 மணியளவில் சிவகங்கை நகர் காவல் நிலைய ஆய்வாளர் போன் செய்து கொலை கேஸ் சம்பந்தமாக சாட்சி ஒருவரை விசாரிக்க வேண்டியுள்ளது என்று சொல்ல வரச் சொன்னார். நானும் தலையாரி கார்த்திகைராஜாவும் காலை 08.00 மணியளவில் காவல் நிலையம் போனோம். ஆஜர் எதிரிகள் இருவரையும் மற்ற ஒரு எதிரியையும் அப்போது போலீசார் காவல் நிலைய லாக்கப்பில் வைத்திருந்தார்கள். அங்கிருந்து போலீசார் எங்களையும் எதிரியையும் சாம்பவிகா பள்ளி அருகே உள்ள முந்திரி தோப்பிற்கு அழைத்து சென்றார்கள். சம்பவயிடத்தில் வைத்து எதிரி ஒருவர் பீர் பாட்டிலை போலீசாரிடம் எடுத்து காண்பித்தார். அந்த எதிரி இன்று ஆஜரில்லை. பிறகு மானாகுடி விளக்கிற்கு போலீசார் கூட்டிச் சென்றார்கள். அங்கு ஆர்எஸ்பதி தோப்பிற்கு கூட்டிப் போனார்கள். அதில் சேர் ஆட்டோ ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து துணிமணிகளை எதிரி ஒருவர் எடுத்துக் கொடுத்தார். அவர் இன்று ஆஜர் இல்லை. அந்த ஆட்டோ என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது தான். (4 புகைப்படங்கள்) அவை **அ.சா.ஆ.8** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. அது சம்பந்தமாக தயாரித்த அத்தாட்சியில் நான் கையெழுத்திட்டுள்ளேன். அது என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பீர் பாட்டில் கைப்பற்றப்பட்ட போது தயாரிக்கப்பட்ட அத்தாட்சியில் நான் கையெழுத்திட்டுள்ளேன். அது என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு ஸ்டேசன் வந்தோம். அங்கு ஆஜர் எதிரிகள் 3 பேரும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை போலீசார் எழுதி பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பீர் பாட்டில்களை துணிகளில் எடுத்துக் கொடுத்தது சம்பந்தமாக அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார். அந்த பீர் பாட்டில் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் முன்னிலையில் மிதியடி எதுவும் கைப்பற்றப்படவில்லை. இரண்டு சட்டை, இரண்டு லுங்கி, வேஷ்டி கைப்பற்றினார்கள். ஆட்டோவிலிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு கைலிகள் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அவை **அ.சா.பொ.8 மற்றும் 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மஞ்சள் கலர் சட்டை கைப்பற்றினார்களா என்று நான் பார்க்கவில்லை. இரண்டு சட்டையின் கலர் என்னவென்று எனக்கு ஞாபகமில்லை. கைப்பற்றப்பட்ட வெள்ளை வேஷ்டி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.பொ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் தலையாரியும் சாட்சி கையெழுத்துப் போட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து மதியம் 12.30 மணிக்கு கொடுக்கப்பட்டது.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பில் அதை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது:**

ஒப்புதல் வாக்குமூலம் 12.30 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. கைப்பற்றுகை மகஜரும் காவல் நிலையத்தில் வைத்து தான் தயாரிக்கப்பட்டது. காவல் நிலையத்தில் வைத்து தான் கைப்பற்றுகை மகஜரில் நானும் தலையாரியும் கையெழுத்து செய்தோம். எதிரிகளை எந்த தேதியில் கைது செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் இடம் வாணியங்குடி குரூப்பிற்கு கட்டுப்பட்டதல்ல என்று சொன்னால் அது சரிதான். ஆட்டோ கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடம் வாணியங்குடி குரூப்பிற்கு கட்டுப்பட்டதல்ல. போலீசார் கையெழுத்துப் போட வேண்டும் என்று கேட்டார்கள் அதனால் போட்டு வந்தோம். என் முன்னிலையில் எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் என் முன்னிலையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் காவல் துறைக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.